வருகிறது. இன்னும் 2 மாதங்களுக்குள்ளாக அந்தத் தனி அலுவலருடைய பதவிக் காலம் முடிவடைகிறது. ஆகவே, வினாவில் அவர் விரும்புவது: அதற்குப் பிறகு அரசு அந்தக் கல்லூரியை எடுத்துச் செயல்படுத்த வேண்டுமென்று ஒரு வேண்டுகோள் வைக்கின்றார். இதில் பல சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஆராய்ந்து அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 51, திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

51—

உயர்நிலைப் பள்ளி

*19047—**திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் உள்ள சேக்குப்பேட்டை நகராட்சி நடுநிலைப் பள்ளியைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்திலுள்ள சேக்குப்பேட்டை நகராட்சி நடுநிலைப் பள்ளியைப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசாணை (நிலை) எண் 97, பள்ளிக் கல்வி, நாள் 4-7-2002-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சி மாநகரம், அரசியல், ஆன்மீகம், சுற்றுலா மற்றும் பட்டுக்குப் பெயர் பெற்றது என்பது அனைவருக்கும் தெரியும். இந்த மாநகரத்திலே ஏறக்குறைய 2 இலட்சம் மக்கள் வாழ்கின்றார்கள். பெண்களுக்காக அரசு சார்பிலே 2 உயர்நிலைப் பள்ளிகள்தான் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பெண்கள் ஆண்களைப் போல் கல்வியிலே உயரவேண்டுமென்று திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றார்கள். ஆகையால், அந்த வகையிலே பெண்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுக்கின்ற வகையிலே, அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திய, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அம்மா அவர்களின் அரசுக்குத் தொகுதியின் சார்பிலும், என் சார்பிலும் நன்றி கூறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 52, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.*

52—

நீதிமன்றக் கட்டடம்

*13142—**திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயத்தில் உள்ள உரிமையியல் நீதிமன்றத்திற்கும், குற்றவியல் நீதிமன்றத்திற்கும் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சென்னை உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்ட முன்னுரிமைப் பட்டியலில் இத்திட்டம் இடம் பெற்றுள்ளது.

(ஆ) மைய அரசிடமிருந்து கோரப்பட்ட நிதி பெறப்பட்டவுடன் பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வினாவிற்கு அமைச்சர் அவர்கள், அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாகக் கூறியிருக்கின்றார்கள்.